0 19

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8348/SNP8338**– விசேட கல்வித்தேவை கொண்டவர்களுக்கான வழிகாட்டலும் ஆலோசனையும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 15.12.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி – I

1. இலங்கை சூழமைவில் பாடசாலை முறைமையில் வழிகாட்டல் ஆலோசனை சேவைகளின் தேவைகளை ஏற்படுத்தியுள்ள இரண்டு (02) காரணிகளைச் சுருக்கமாகப் பகுப்பாய்வு செய்க.
2. ஆசிரியர் ஒருவர் விசேட தேவைகள் கொண்ட பிள்ளைகளுடன் செயற்படும் போது பொருத்தப்பாடு தொடர்பான அறிவு எவ்வாறு நன்மையளிக்கும் என இரண்டு (02) உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விபரிக்குக.
3. பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவைகளுடன் தொடர்புபட்ட அடிப்படைச் செயன்முறைகள் இரண்டினை (02) குறிப்பிட்டு விசேடக் கல்வித் தேவைகள் கொண்ட பிள்ளைகளின் விருத்திக்கு வசதியளிக்கும் போது பயனுள்ளதாக அமையும் என கலந்துரையாடுக.
4. விசேட பிரச்சினைகளுக்கான ஆலோசனை துறைகளில் ஒன்றான அதிர்ச்சி (Trauma) ஆலோசனையின் முக்கியத்துவத்தினை இரண்டு (02) உதாரணங்களின் துணையுடன் விளக்குக.
5. விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்கும் போது ஆலோசனை நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் இரண்டு (02) பற்றி கலந்துரையாடுக.
6. இலங்கையில் பாடசாலை முறைமைக்கு வெளியில் தற்போது செயற்படும் வழிகாட்டல் ஆலோசனை சேவையொன்றினைக் குறிப்பிட்டு, பாடசாலை முறைமையோடு தொடர்புபட்ட பங்கெடுப்பாளர்களுக்கு உதவி செய்தலில் அதன் வகிபாகத்தினை மதிப்பீடு செய்க.
7. "விசேடக் கல்விசார் தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு தொழில் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுத்தல், அவர்கள் பெறுமதிமிக்கதும் வெற்றிகரமான எதிர்காலத்தினைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு உதவியாக அமையும்"
   விசேட கல்விசார் தேவைகள் கொண்ட பிள்ளைகளுக்கு தொழில் வழிகாட்டலை பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி இக்கூற்றினை நியாயப்படுத்துக.
8. தனியாளை மையப்படுத்திய ஆலோசனைக் கூறல் அணுகுமுறையின் அடிப்படை தத்துவத்தினை விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

பகுதி – II

9.

**i.** இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் கற்பித்தல் - கற்றல் செயன்முறையோடு தொடர்புபட்டதாக முகங்கொடுக்கும் நான்கு (04) பிரச்சினைகளைப் பட்டியற்படுத்துக

**(04 புள்ளிகள்)**

**ii.** இடைநிலைப் பாடசாலை வயதெல்லையைக் கொண்ட மாணவர்களின் வாழ்வில் ஏன் விசேட பருவமாக கருதப்படுகின்றது என இப்பருவத்தினரின் விருத்தி இயல்புகளில் மூன்றினையாவது (03) குறிப்பிட்டுக் காட்டி பரிசீலனை செய்க.

**(06 புள்ளிகள்)**

**i.** நீங்கள் உங்களுடைய பாடசாலையின் ஆலோசனைச் சேவை அலகின் பொறுப்பாசிரியர் என கருதுக. தங்களுடைய பிள்ளைகளின் வழிகாட்டல் ஆலோசனை தேவைகளுக்காக அடுத்துவரும் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்திற்கு வருகை தரும் தரம் 08 மற்றும் தரம் 09 மாணவர்களின் பெற்றோர்களுக்காக உரையாடுவதற்காக திட்டமிடுகின்றீர்கள். இந்த உரைக்கான அறிமுகம் மற்றும் முக்கியமான அம்சங்கள் மற்றும் முடிவுரை என்பன அடங்கிய, வரைவு திட்டமொன்றினை தயாரிக்குக. குறைந்தபட்சம் நான்கு (04) அம்சங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**(10 புள்ளிகள்)**

10.

**i.** "நடத்தைசார் பிரச்சினைகள்" எனும் எண்ணக்கருவினை இரண்டு (02) உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** பிள்ளைகளின் அத்தகைய நடத்தைப் பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்லும் பாடசாலைச் சூழலுடன் தொடர்புபட்ட காரணிகள் மூன்றினை (03) இணங்கண்டு, எவ்வாறு அவை ஒவ்வொன்றும் எவ்வாறு அத்தகைய பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்கின்றனவென கலந்துரையாடுக.

**(2 x 3 = 06 புள்ளிகள்)**

**iii.** நீங்கள் உங்களுடைய சகபாடிகளால் நடத்தைப் பிரச்சினைகள் கொண்ட பிள்ளைகள் எனும் தலைப்பில் செயலமர்வு ஒன்றில் உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டுள்ளீர்கள் என கருதுக. அத்தகைய பிரச்சினைகள் கொண்ட பிள்ளைகளை கையாள்வதற்கான நான்கு (04) பிரதான உபாயங்களைக் குறிப்பிட்டு பேச்சொன்றினை எழுதுக.

**(10 புள்ளிகள்)**

11.

**i.** "உடலியல் சார் இயலாமை" என்ற எண்ணக்கருவினையும் உடலியல்சார் இயலாமைக்குரிய பிரதான காரணங்கள் இரண்டினையும் (02) விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** பேச்சு தொடர்பான பிரச்சினைகளை கொண்ட பிள்ளைகளின் பொதுவான இயல்புகள் மூன்றினை (03) விபரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**iii.** உங்களுடைய வகுப்பறையில் பேச்சுக் குறைபாடுடைய இரண்டு (02) பிள்ளைகள் இருக்கிறார்கள் என கருதவும். கற்பித்தல் - கற்றல் செயன்முறையின் போது அவர்களுக்கு வசதி செய்வதற்காக நீங்கள் பின்பற்றக் கூடிய மூன்று (03) உபாயங்கள் பற்றி கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

12.

**i.** கற்றல் இடர்பாடு" எனும் எண்ணக்கருவினையும் "கற்றல் இயலாமை" எனும் எண்ணக்கருவுடனான அதன் தொடர்பினையும் விளக்குக.

(04 புள்ளிகள்)

**ii.** "கற்றல் இடர்பாடுகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு அவர்களுடைய ஆசிரியர்களின் விசேட ஒத்துழைப்பு தேவைப்படும்" இக்கூற்றினை மூன்று (03) பிரதான அம்சங்களின் துணையுடன் நியாயப்படுத்துக.

**(2 x 3 =** 06 புள்ளிகள்)

**iii.** உங்களுடைய தரம் ஐந்து (05) வகுப்பறையில் கற்றல் இடர்பாடுகளைக் கொண்ட பல்வேறு பிள்ளைகள் இருக்கின்றார்கள் என கருதுக. ஒரு வகுப்பாசிரியர் என்ற வகையில் கற்பித்தல் - கற்றல் செயன்முறையின் போது அவர்களுடைய விருத்திக்காக நீங்கள் எவ்வாறு வசதி செய்வீர்கள்? நீங்கள் பின்பற்றும் நான்கு (04) உபாயங்களை குறிப்பிட்டு கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

13.

**i.** ஆலோசனைக் கூறலில் நடத்தைவாத அணுகுமுறையின் அடிப்படைத் தத்துவத்தினை விளக்குக.

**(04** புள்ளிகள்)

**ii.** ஒரு ஆலோசகர் தன்னுடைய ஆலோசனை நாடிக்கு பரிகாரமளிப்பதற்கு பின்பற்றக் கூடிய மூன்று (03) பிரதான நடத்தைவாத அணுகுமுறைகளை சுருக்கமாக விபரித்து, அவ் அணுகுமுறைகளின் ஊடாக தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளை ஒவ்வொன்றையும் குறிப்பிடுக.

**(3 x 2=06** புள்ளிகள்)

**iii.** குறிப்பான பிரச்சினைகளையம் அபிவிருத்திசார் தாமதங்களையும் கொண்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கு உதவுவதற்கு ஆலோசனைக் கூறலின் நடத்தைவாத அணுகுமுறையின் பங்களிப்பினை மதிப்பீடு செய்க.

**(10** புள்ளிகள்)

14.

**i.** எலி கின்ஸ்பேர்க் முன்வைத்துள்ள தொழில் தெரிவு கோட்பாட்டிற்கு அமைவாக தனியாள் ஒருவரின் தொழில் தெரிவின் இயல்புகளை விளக்குக.

**(04** புள்ளிகள்)

**ii.** "யதார்த்த பூர்வமான தெரிவு பருவத்தின்" போது தனியாளின் தொழில் தெரிவு எவ்வாறு வளர்ச்சியடைகின்றது என பரிசீலனை செய்க.

**(06** புள்ளிகள்)

**iii.** பின் கட்டிளமைப் பருவ மாணவர்கள் பொருத்தமான தொழில் பாதையை தெரிவு செய்வதற்காக உதவுவதில் கின்ஸ்பேர்க் இன் தொழில் கோட்பாட்டின் பயன்களை பரிசீலனை செய்க.

**(10** புள்ளிகள்)

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*